| Page No.4 | |
|---|---|
| **சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்** | |
| நாள் | 21.08.2024 |
| MCOP | 151/2020 |
| எ.ம.சா.2 | எஸ்.கோகுல் கண்ணன் |

2024ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21–ம் நாள் எஸ்.கோகுல் கண்ணன் என்பவர் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டின் 54வது சட்டப்பிரிவு(2) ஏற்பாட்டின்படி திரு.எஸ்.ஜீவாபாண்டியன்,M.Com.,M.Phil.,M.L., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | எஸ்.கோகுல் கண்ணன் | சமயம் | : |
| தந்தை பெயர் : | | தொழில் | : |
| கிராமம் : | | வயது | : |
| தாலூக்கா : | | | |

முதல் விசாரணை –

நான் இவ்வழக்கில் 2ஆம் எதிர்மனுதாரரான நிறுவனத்தில் முதுநிலை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எனது முதல் விசாரணைக்கான சத்திய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். எனது தரப்பில் கீழ் கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகின்றன. 1) 08.04.2015 ஆம் தேதியிட்ட காப்பீட்டு திட்ட எண். 91914872 என்பதின் சான்றிட்ட நகல் **எ.ம.சா.ஆ.3** ஆகும். 2) 10.06.2024 ஆம் தேதியிட்ட எங்களது வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் **எ.ம.சா.ஆ.4** ஆகும். 3) அஞ்சலக ஒப்புதல் அட்டையின் அசல்கள் **எ.ம.சா.ஆ.5** வரிசைகள் (எண்ணிக்கைகள்.2) ஆகும். மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**:-

விபத்திற்கு காரணமான டி.என்.60ஆர்1631 என்ற வாகனம் விபத்து சமயத்தில் எங்களது நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வாகனத்தின் ஓட்டுநரின் சொந்த ஊர் கேரளா என்றால் சரிதான். மேற்படி ஓட்டுநர் கேரளா மாநிலத்தில் ஓட்டுநர் உரிமம் பெற்றிருந்தால் அதுபற்றி எனக்கு தெரிய வாய்ப்பில்லை

என்றால் சரிதான். மனுதாரருக்கு எங்களது காப்பீட்டு நிறுவனம் தான் நஷ்ட ஈடு தரவேண்டும் என்றால் சரியல்ல.